# கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## ஒன்றிணைந்த கிராமிய - நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம் (IRDCRP)

THE WORLD BANK

# திட்ட ஊழியர் ஆட்சேர்ப்பு

ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டமானது (IRDCRP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் உலக வங்கியினால் (WB) கூட்டாக நிதியளிக்கப்பட்டு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டம் ஒன்றாகும். மொத்த திட்ட செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதோடு பண்ணையில் மதிப்புச் சங்கிலியில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் தோட்டத் துறையில் உப துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நில உடைமையாளர்களை ஆதரிப்பதற்கு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில் விவசாய உணவு உற்பத்திகளின் உற்பத்தி, போட்டித்தன்மை மற்றும் காலநிலை மீள்திறனை மேம்படுத்துவது இந்த 05 ஆண்டு திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு (PMU) ஒப்பந்த அடிப்படையில் (01 தொடக்கம் 17 வரை) பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கு இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பதவிக்கான சம்பளமும் வைக்கப்படும்.

| இல. | சம்பள பிரிவு மட்டம் | பதவி | பதவிகளின் எண். |
|---|---|---|---|
| 01. | PS 2 | பிரதி திட்டப் பணிப்பாளர் - PMU | 01 |
| 02. | PS 2 | பிரதி திட்டப் பணிப்பாளர் - PMU (கூறு – 1) | 01 |
| 03. | PS 3 | வர்த்தக அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிபுணர் | 01 |
| 04. | PS 3 | நிறுவன மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு நிபுணர் | 01 |
| 05. | PS 3 | சிரேஷ்ட திட்ட பொறியியலாளர் (சிவில்) | 01 |
| 06. | PS 3 | சிரேஷ்ட திட்ட பொறியியலாளர் (நீர்ப்பாசனம்) | 01 |
| 07. | PS 3 | நீர் முகாமைத்துவ நிறுவனம் | 01 |
| 08. | PS 3 | காலநிலை ஸ்மார்ட் விவசாய நிபுணர் | 01 |
| 09. | PS 3 | ICT/IEC நிபுணர் | 01 |
| 10. | PS 4 | கணக்காளர் | 01 |
| 11. | PS 4 | உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 12. | PS 5 | சிரேஷ்ட பெறுகை அதிகாரி | 01 |
| 13. | PS 6 | திட்ட உத்தியோகத்தர் (இளைஞர் மற்றும் பெண்கள்) | 01 |
| 14. | PS 6 | திட்ட உத்தியோகத்தர் (நிறுவன மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு) | 01 |
| 15. | PS 6 | திட்ட உத்தியோகத்தர் (கூறு – 3) | 01 |
| 16. | PS 6 | பொறியியல் உதவியாளர் | 01 |
| 17. | PS 6 | திட்ட செயலாளர் | 01 |

**அடிப்படை தகைமைகள் மற்றும் அனுபவம்**

அடிப்படை தகைமைகள் மற்றும் அனுபவம் விண்ணப்ப இறுதித் திகதியில் 01/2019 ஆம் இலக்க ஆளுனு சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்:

- வயது வரம்பு: விண்ணப்ப இறுதித் திகதியில் அறுபத்து இரண்டு (62) வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இலங்கையில் கொடை நிதி அளிக்கப்பட்ட இதனையொத்த அல்லது இதற்கு மேற்பட்ட திறன் கொண்ட திட்டம் ஒன்றில் பணி அனுபவம் விரும்பத்தக்கது.
- தேவைக்கு அமைய பணியாளர் திட்டத் தளத்திற்கு பயணிக்க வேண்டும்.
- ஆங்கிலத்தில் புலமை, கணினி அறிவு மற்றும் தேவையான அரச விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடனான பரீட்சயம்.
- தொடர்புடைய துறையில் தொழில்முறை அனுபவம் மேலதிக தகைமையாக அமையும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதோடு மேலுள்ள ஆட்சேர்ப்பு தொடர்பில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, செயலாளரின் முடிவு இறுதியானது மற்றும் முடிவானதாகும்.
- எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

முகப்புக் கடிதம், இரு உறவினர் அல்லாத நடுவர்களுடன் சுயவிபரக்கோவை மற்றும் அனைத்து சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து தமது விண்ணப்பங்களை 2025 நவம்பர் 09ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு இறுதித் திகதிக்கு முன்னதாக pmuirdcrp@gmail.com என்ற முகவரிக்கு உங்களது விண்ணப்பத்தை மின்னஞ்சல் செய்தல் வேண்டும். மேலும், இறுதித் திகதிக்கு முன்னர் https://forms.gle/88XF2MKp8dXcocg18 என்ற இணைப்பை பயன்படுத்தி Google sheet இணை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தற்போது அரச/ அரச சார்பு சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பிரிவு,**
**ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம்**
**இல: 123/2, பன்னிப்பிட்டி வீதி,**
**பத்தரமுல்லை.**

மேலதிக விபரங்களுக்கு (வேலை விபரம்/ குறிப்பு விதி, அடிப்படை தகைமைகள் முதலியன) (https://www.agrimin.gov.lk) என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

**செயலாளர்**
**கமத்தொழில், கால்நடை வளங்கள்,**
**காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**